செ.வெ. எண்: 434 நாள்: 24.07.2012

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 11.05.2012 அன்று நடைபெற்ற தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளைத் தொடர்ந்து 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள சிறப்புப் புதுப்பித்தல் சலுகையை அரசாணை (டி) எண் 320 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை நாள் 19.07.2012 இன் வாயிலாக தமிழக அரசு வழங்கியுள்ளது.

1. இச்சலுகையை பெற விரும்பும் மனுதாரர்கள் அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆன்லைன் மூலமாகவோ / மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவோ தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

2. 18.10.2012–க்குப்பின் பெறப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

3. 01.01.2008–க்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்குறித்த காலக்கட்டத்தில் தங்களது பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் {HYPERLINK "http://tnvelaivaaippu.gov.in"} என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலமாக 18.10.2012–க்குள் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

இணையதளம் மூலம் பதிவினைப் புதுப்பிக்க இயலாதவர்கள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலைவாய்ப்பு அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்துக் கொள்ளலாம்.

மகேசன் காசிராஜன்
இயக்குநர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**